**Publication: Tamil Murasu, pg 2**
**Date: 6 September 2021**
**Headline: Paralympics: PM Lee commends Team Singapore for their performance in Tokyo**

# உடற்குறையுள்ள ஒலிம்பிக் வீரர்களுக்குப் பிரதமர் லீ பாராட்டு

சிங்கப்பூரைப் பிரதிநிதித்து உடற்குறையுள்ளோருக்கான ஒலிம்பிக் விளையாட்டுகளில் போட்டியிட்ட வீரர்களுக்குப் பிரதமர் லி சியன் லூங் ஃபேஸ்புக் வாயிலாகத் தமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

"சிங்கப்பூரைச் சேர்ந்த 10 வீரர்கள் விளையாட்டுகளில் போட்டியிட்டனர், அவர்களில் நால்வர் முதன்முறையாகப் பங்கேற்றவர்கள்.

"அனைவரும் பாராட்டப்படும் வகையில் சிறப்பாகச் செய்துள்ளனர்," எனப் பிரதமர் லீ கூறினார்.குறிப்பாகச் சவால்மிக்க இந்தக் காலகட்டத்தில் மனவுறுதி, துடிப்பு, விட்டுக்கொடுக்காமல் போராடும் தன்மை ஆகியவற்றின் மூலம் சிங்கப்பூரர்களை ஊக்குவித்ததற்கு அவர் வீரர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

போட்டிகளில் முத்திரை பதித்து சிங்கப்பூருக்குப் பெருமை சேர்த்த பல வீரர்களைத் திரு லீ குறிப்பிட்டுச் சொன்னார். தொடர்ந்து தங்கமகளாக விளங்கிவரும் நீச்சல் வீராங்கனை யிப் பின் சியூ அவர்களில் ஒருவர்.

ஜப்பானியத் தலைநகர் தோக்கியோவில் நடைபெற்ற உடற்குறையுள்ளோருக்கான ஒலிம்பிக் விளையாட்டுகள் சென்ற மாதம் 24ஆம் தேதியன்று தொடங்கி நேற்று நிறைவடைந்தது. அடுத்த ஒலிம்பிக் விளையாட்டுகள் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடைபெறும்.